# புலிகளுக்கு எதிராக முஸ்லிம்கள் புனித யுத்தமா?
# அவ்விதமுடிவை 'ஜிமியதுல்உல்மா' எடுக்கவில்லை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முஸ்லிம்கள் புனித யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. —மௌலவி ரியால்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 27 இதழ் 275
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12 — 11 — 1992

## கடற்படைதளம்மீது புலிகள் தாக்கு

(மனிலா)

நயினாதீவிலுள்ள மிகப்பலம் வாய்ந்த இலங்கை கடற்படைக்குச் சொந்தமான தளம் ஒன்றை விடுதலைப்புலிகள் திடீரெனத் தாக்கியதாக 'வெரித்தாஸ்' வானொலி

(4ம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் 17 ஆயிரம் இலங்கை தமிழர் பரிதவிப்பு

(சூரிச்)

சுவிஸில் அடைக்கலம் கோரியுள்ள சுமார் 17,000 இலங்கைத் தமிழர் தமது நிலை குறித்து சுவிஸ் அரசாங்கத்தின் முடிவு என்னவாக இருக்குமென்று கேள்விக்குறியுடன்

(4ம் பக்கம் பார்க்க)

### ★ வடக்கு - கிழக்கு

# யுத்தநிலை பற்றி கூறிய பின்பே
# அகதிகளை அழைக்கவேண்டும்

## 'ஏசியா வோச்' நிபந்தனை

(புதுடில்லி)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்த நிலைமைகளைப் பற்றித் தெளிவாகத் தெரிவித்த பின்னரே அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் அகதிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதமும் அளிக்கப்படவேண்டும் அல்லது அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் தனது ஆதரவை வழங்கக்கூடாது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலத்தகாற்றுடன் 24மணி நேரத்தில் மழை!

(கொழும்பு)

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்துக்குள் இடிமுழக்கத்துடன் கூடிய மழையும், பலத்த காற்றும் வீசக்கூடுமென்று, வளிமண்டலத் திணைக்களம் அறி

(4-ம் பக்க பார்க்க)

## மட்டுநகரை இன்று சூறுவளி தாக்குமா?

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தை இன்று கடுமையான புயல்காற்று தாக்கக்கூடும் என்று வளிமண்டலத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய வரவு-செலவுத் திட்டம் றெனியின் தயாரிப்பு?

(கொழும்பு)

இம்முறை அரசாங்கம் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை முன்னாள் நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் லண்டனில் வைத்து உலக வங்கியின் ஆலோசகர்களின் உதவியுடன் தயாரித்து அனுப்பியதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அரசாங்கம் இருந்த

[4ம் பக்கம் பார்க்க]

## ஆரம்ப ஆசிரியர் ஆயிரம் பேர் தெரிவு

(கொழும்பு)

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்காக அண்மையில் நடைபெற்ற பரீட்சையில் ஆயிரம் பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக கல்வி சேவைகள் சபை அறிவித்துள்ளது,

(4-ம் பக்கம் பார்க்க)

## 26 இல. மீனவர்களையும இந்தியா விடுவித்தது

(சென்னை)

இந்திய கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்தமைக்காக இந்திய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 26 இலங்கை மீனவர்களும் நேற்று முன்தினம் விடு

(4-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை அனுமதி அட்டைகள்

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் அடுத்த மாதம் முதல் நடைபெறவிருக்கும் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட உள்ளன. (வி)

## புலிகளுடன் பேசுமாறு எம்.பி.க்கள் வலியுறுத்து

(கொழும்பு)

அரசு உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரச தரப்பிலும் எதிர்க்கட்சி தரப்பிலும் நேற்று நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடந்த பத்து வருடங்

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ மாவீரர் வாரம்

## வட்டவைக்கு 10 வளைவுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21-ம் திகதியில் இருந்து 27-ம் திகதி வரை தமிழீழம் எங்கும் நடைபெறவுள்ள மாவீரர் வாரத்தை யொட்டி அமைக்கப்படும் வளைவுகள், பந்தல்கள் வீதிச் சோடனைகள், பதாகைகள் என்பன எப்படி அமைய

(4-ம் பக்கம் பார்க்க)

## புஷ்ஷின் தோல்வி பிரேமாவை வெகுவாகப் பாதிக்கும்?

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஜோர்ஜ் புஷ் தோல்வியைத் தழுவியது ஜனாதிபதி திரு. பிரேமதாசா தலைமையிலான அரசாங்கத்தைப் பெரிதும் பாதிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. புஷ் கடைப்பிடித்து வந்த பொருளாதாரக் கொள்கைகளும் சர்வதேசக் கொள்கைகளும் இலங்கை போன்ற சிறிய வளர்முக நாடுகளுக்கு அப்போது பெரிதும் உதவியாக இருந்தன.

(4ம் பக்கம் பார்க்க)

**காடுயரின் காலமெல்லாம் நீடூழி வாழ்வுண்டு**

# வரி விளம்பரம்


### வைத்திய நிலையம்

வேலணையூர் நடனமுருகன் வைத்திய நிலையம் தற்பொழுது சத்திரச் சந்தி கொட்டடி ரோட், யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது டாக்டர் கந்தையா நவரத்தினம். (சி-6958

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6887)

### முதலாம்பிள்ளை

பரிசளிப்பதற்கேற்ற, சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30 ரூபா கழிவு 20 வீதம் 30, கடையிற்சுவாமி வீதி நீராவியடி, யாழ்ப்பாணம். (சி-6963)

### அனுமதி பர்ட்சை
### (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி பிரவேசப் பரீட்சை 12-10-92 வியாழக்கிழமை (இன்று) பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களை அன்றே (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [எ-2579]

### O/L மாணவருக்கு

சமூகக் கல்வி சாதாரணப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி வினாவிடைகள் புத்தகசாலைகளில் பெறலாம். ஆக்கம்: நா. மயில்வாகனம். (சி-6971)

### நீம் சுகாதார தூபம்

நீம் சுகாதார தூபம், ஓர் இயற்கை நுளம்பு விரட்டி. நுளம்பு பெருகிட நோயும் பரவிடும். பாதுகாப்பு பெற உள்ளூர் உற்பத்தியான நீம் சுகாதார தூபம் பாவியுங்கள் அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகின்றது. (எ 2584)

### வைத்தியம்

செங்கண்மாரி சூடற்புண், தொய்வு வாதரோகங்கள் வலிப்புநோய் பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருதழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி-6954)


## மோதல்

(கொழும்பு)

அம்பாறையில் விநாயகபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

## தையல் பயிற்சி நிலையம்

(பருத்தித்துறை)

யாழ். தொழில் திணைக்களம் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தும்பளை மேற்கில் படித்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. (52)

## இராசி பலன்

**12-11-1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு ஐப்பசி 27)**

துதியை பி. ப. 3-04 வரை: ரோகிணி மு. இ. 8-27 வரை. மரணயோகம் இராகுகாலம் பகல் 1 37 முதல் 3-07 வரை சுபநேரம் காலை 7-37 முதல் 9-07 வரை.

மேடம்: சோம்பேறித்தனம் மனக்கவலை, புத்திரர் துன்பம்

இடபம், வசீகரசக்தி, கல்வி மேன்மை உயர்ந்தநிலை

மிதுனம்: காரியசித்தி, தொழில் சிறப்பு, மாமனார் பெருமை.

கடகம்: கெட்ட பெயர். உறவினர் உதவி, பயணம்

சிங்கம்; பேராசைக்குணம், தொழில் லாபம், மனமகிழ்ச்சி

கன்னி: சகோதர விரோதம், குடும்ப போராட்டம், அமைதிக்குறைவு.

துலாம்: துர்பாக்கியநிலை, ஏமாற்றம், குடும்பமனஸ்தாபம்.

விருச்சிகம்: தொழில் முயற்சி, செல்வந்தர் உதவி, இறைவழிபாடு.

தனுசு: மனம் அலைபாய்தல், தொழில் மேன்மை, புதிய சிந்தனை.

மகரம்: ஆரோக்கியகுறைவு வேண்டாத தொல்லை, அலைச்சல்.

(4-ம் பக்கம் பார்க்க)

அரச திணைக்களங்களில்

## இடைநிறுத்தப்பட்ட ஊழியர்க்கு நிவாரணம் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்கள் மூடப்பட்டதனால் எந்தவித கொடுப்பனவும் இன்றி சேவையில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகள் குறித்து அரச உயர் மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

ஓய்வூதியம் பெறுவதற்குரிய 10 வருடகால சேவையை பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்கே இச்சலுகை வழங்கப்படவுள்ளதாகவும் இவர்கள் பற்றிய விபரங்களை தாபனம் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படி மேற்படி சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வூழியர் பற்றிய விபரங்களை பதிவு செய்யுமாறும் தேவையேற்படின் இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்டோரை வேலைக்கமர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாற்றுவேலை வாய்ப்பு வழங்கும் வரை அல்லது 10 வருட சேவையை பூர்த்தி செய்யும் வரை அவர்களுக்கான சம்பளத்தை வழங்க திறைசேரியிலிருந்து நிதி பெற்றுக் கொள்ளப்படவிருக்கிறது. (க)

## பிறப்பு பதிவுகள் அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் கடந்த இருவருடங்களாகப் பிறக்கும் குழந்தைகளின் பதிவுகள் இதுவரை யாழ் செயலகபதிவாளர்பகுதிக்கு அனுப்பிவைக்கப்படவில்லையென்று கூறப்படுகின்றது.

இதனால் இக்காலப்பகுதிகளில் பிறந்த தமது பிள்ளைகளின் பிறப்புப்பத்திரங்களை பெறமுடியாது பெற்றோர் திண்டாடுகின்றார்கள்

இதேநேரத்தில் வெளியிடங்களில் உள்ள தனியார் வைத்திய நிலையங்களிலும் மற்றைய அரச வைத்தியசாலைகளிலும் பிறக்கும் குழந்தைகளின் பதிவுகள் யாழ் செயலகத்தில் உரியநேரத்தில் முறைக்கு முறை பதியப்படுகின்றதாம். குறிப்பாக 1-5-91-ம் திகதியின் பின்பு யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த எந்த ஒரு குழந்தையின் பதிவுகளும் யாழ் செயலகத்தில் பதியப்படவில்லை என்றும் தற்போது தெரியவந்துள்ளது. (வி)

## தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சை

(திருநெல்வேலி)

அரசாங்க எழுதுவினைஞர் சேவையின் கீழ் தட்டெழுத்தாளருக்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கானபரீட்சை இம்மாதம் 28ம் திகதி இங்கு நடைபெற உள்ளதாக கொழும்பிலிருந்து அரச அதிபர் செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

எழுது வினைஞர்களுக்கான போட்டிப்பரீட்சைகள் ஜனவரி மாதம் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28ம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கான ஏற்பாடுகளை அரச அதிபர் கொழும்பிலிருந்து மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (157)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை
### சுழிபுரம்

# 1993-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் / வட்டுக்கோட்டை / சங்கானை / அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க்குறிக்கப்பட்ட சந்தைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றிக்கான சீல் வைத்த கேள்விகள் 02-12-92-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரப் பணத்தையும 18-11-92-ம் திகதியிலிருந்து 26-11-92-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தேவையான விபரங்களையும் நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அறிந்துகொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ள கூடிய குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. சுழிபுரம் | 1. சத்தியகாட்டுச் சந்தை | 16,500-00 | 100-00 | 25-00 |
| | 2. பல்லசிட்டிச் சந்தை | 5,500-00 | 100-00 | 25-00 |
| | 3. தொல்புரம் மத்திய சந்தை | 660-00 | 50-00 | 25-00 |
| | 4. பொன்னாலைச் சந்தை | 1,650-00 | 100-00 | 25-00 |
| | 5. புதிய சந்தைக் கடை இல. 5 | 25,000-00 | 250-00 | 25-00 |
| | 6. கருவாட்டுக் கடை | 605-00 | 50-00 | 25-00 |
| 2. சங்கானை | 1. கருவாட்டுக் கடை | 1,210-00 | 100-00 | 25-00 |
| | 2. பொது மரக்கறிச் சந்தை | 28,600-00 | 200-00 | 25-00 |
| | 3. மீன் சந்தை | 27,500-00 | 250-00 | 25-00 |
| 3. வட்டுக் கோட்டை | 1. பொதுச்சந்தை | 17,600-00 | 100-00 | 25-00 |

ரூபினி கனகரத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலி-மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
சுழிபுரம்.

(ஏ-2583)

## அடையாள அட்டைப் படம்

தேசிய அடையாள அட்டைப்படம் பிடிக்க ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்

## குகன் ஸ்ருடியோ
பருத்தித்துறை

(எ 2580)

# வேலை வாய்ப்பு
## பயிலுனர் விற்பனைப் பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரி சுயமாக சிந்தித்துச் செயல்படக்கூடியவராகவும், சந்தைப் படுத்தலைத் தொழிலாக்கிக்கொள்ள விரும்புபவராகவும் இருத்தல் வேண்டும்.

பயிற்சிக்காலத்தின்போது அலவன்ஸ் வழங்கப்படும். பயிற்சியின்பின்னர் தகுதியானவராகக் காணப்படும் பட்சத்தில் விற்பனைப் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

### தகுதிகள்

★ 25 வயதுக்கு உட்பட்டவராகவும்
★ க. பொ. த. (உ/த) உடன்
★ குறிப்பிடத்தக்க ஆங்கில அறிவு உடையவராகவும் இருக்க வேண்டும்.

சுய விபரங்களுடன் சிபார்சு செய்யக்கூடிய இருவரது விபரங்களுடன் 20-11-1992 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

**TASTE LINE INDUSTRIES [pvt] LTD**
14, SEENIER LANE,
JAFFNA

[எ 2578]

# புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிகளை அரசு கைவிடும் சூழ்நிலை உருவாகி வருகிறது

## — இனப் பிரச்னை ஐ. நா. வுக்கும் செல்லலாம் —

[நேற்றைய தொடர்ச்சி]

கடந்த 10 வருடங்களாக தொடர்ச்சியாக பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பிரிவினை கோரும் தமிழ் தீவிரவாதிகளுக்கு எதிரானபோரில் எந்த விதமான ஆக்கபூர்வமான உறுதியானநிலைப்பாட்டையும் ஏற்படுத்த தவறிவிட்டனர். அரசின் கோட்பாடுகளும் நோக்கங்களும் தெளிவற்றனவாகவே உள்ளன. அரசியல்வாதிகள் முப்படைகளின் அதிகாரிகளை மாற்றியமைக்கும் தில்லுமுல்லுகளில் சில இலாபங்களை பெற முயன்றுள்ளனர்.

இன்று கிழக்கின் நிலைமை ஸ்திரமற்றதாகவே காணப்படுகிறது. இங்கிருந்து படையினரை இராணுவ நடவடிக்கைகளுக்காக வடக்கில் ஈடுபடுத்துவதும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ரோந்து நடவடிக்கையின் போது புலிகளினால் மேற்கொள்ளப்படும் மின்னல்வேக தாக்குதல்களிலும் அரசாங்கத்தின் கிழக்கு மாகாண நடவடிக்கைக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

கிழக்கை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளடக்கியதாக தொடர்ச்சியாக பிதற்றிக்கொண்டிருந்தபோதிலும் புலிகளின் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் சவாலாகவே அமைந்துள்ளது. அண்மையில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 23 விமானப் படையினர் கொல்லப்பட்டனர். ஜெனரல்களான விமலரத்ன, கொப்பேகடுவ ஆகியோர் இறந்த பின்னர் அரசாங்கம் எந்தவிதமான உறுதிப்பாடான இராணுவத் தாக்குதலையும் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளவில்லை.

இதன் பின்னர் சில இராணுவ நடவடிக்கைகள் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது எந்தவிதமான பாரிய விளைவுகளையும் புலிகளுக்கு ஏற்படுத்தவில்லை.

ஆய்வாளர்கள், அரசு-புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியினை ஏற்படுத்தக் கூடிய எண்ணங்களை கூடுதலாக கைவிடுவார்கள் என்ற கருத்தே பெரும்பாலும் நிலவுகின்றது.

பல ஆண்டுகளாக அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் தனது மேலாதிக்கத்தை புலிகளிடம் இருந்து கைப்பற்றவில்லை. அரசாங்கம் தாங்கள் வெற்றிபெற்றுவிட்டதாக பிரகடனப்படுத்திக்கொண்டாலும் புலிகள் தொடர்ந்தும் தமது தசைகளை அசைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

> ‘ஐலன்ட்’ வார இதழில் (08 11-92) சமின்ரா பேர்டினன்டோ எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.

வடக்கு, கிழக்கில் உள்ள முரண்பாடுகள் பற்றி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் அரசாங்கம் மீண்டும் புலிகளிடம் பேச்சுவார்த்தைகளை தொடர்வார்கள் என்ற ஊகம் தற்பொழுது மிதமிஞ்சிய நிலையில் உள்ளது. அதனால் வடக்கு-கிழக்கில் போரை முடிவுறச் செய்து அரசாங்கம் முழுமையாக தெற்கில் தன்னை தேர்தலுக்கான ஆயத்தங்களிலும் மாகாணசபை, பொதுத் தேர்தல்களுக்கும் தன்னை தயார்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதாக சிலர் கருதுகிறார்கள்.

புலிகளுக்கெதிரான இந்தப் போர் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் 2000கோடி ரூபா செலவை உண்டாக்குவதினால் இதனை முடிவுசெய்வதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என சில மந்திரிமார்கள் கருதுகிறார்கள்.

புலிகள் கூட வடக்கு கிழக்கு பிரச்னை சம்பந்தமாக ஐக்கிய நாடு சபையின் தலையீட்டை கோருவதாக அரசாங்கத்தின் மேல் அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவ்விடயத்தை ஐ. நா. சபையிலும் பிரஸ்தாபிக்கவேண்டும் என ஒரு நாட்டினை தூண்டுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது. அரசாங்கம் தன்மீது ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களின் மத்தியில் புலிகளிடம் கடந்த ஐந்துவருட காலங்களுக்குள் இரண்டாவது முறையாகவும் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றது.

முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தில் இடையிடையே இந்தியாவின் அனுசரணையுடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தோல்வியைத் தழுவிக்கொண்டது.

அண்மைக்கால நிகழ்வுகளின் பிரகாரம் வடமாகாணத்தில் பாரிய கூட்டுப் படை இராணுவ நடவடிக்கை ஏற்பாடுகள் இயற்கையான சாவைத் தழுவிக்கொண்டதென்றே கூறலாம்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை பாதிக்கக்கூடிய வகையில் இராணுவ நடவடிக்கை ஒன்றினை தற்போதய அரசியல் தலைமைப்பீடம் மேற்கொள்ளத் தயக்கம் காட்டி வருவதாக தெரியப்படுகிறது.

— நன்றி: 'ஐலன்ட்.

---

## ★ இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளை இலங்கை பிரஜைகளாக பதிவதில் அகதிகளுக்கு பெரும் சிக்கல்

(கொழும்பு)

இந்தியாவில் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த காலத்தில் பிறந்த இலங்கை தமிழர்களின் குழந்தைகளை இலங்கையின் பிறப்புச்சாட்சிப்பத்திரத்துக்கு பதிய வேண்டுமாகில் தாய் தந்தையின் கடவுச்சீட்டுக்களை சமர்ப்பிக்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் கேட்டு வருகிறார்கள்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குதிரும்பிவந்துதற்போது அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தமிழர்கள் இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளை இங்கு பதிவுசெய்ய முற்பட்டபோது தாய் தந்தையரின் கடவுச் சீட்டை ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டபோது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் ஏற்பட்டபோது தாம் படகுகள் மூலம் தமிழ் நாடுக்குச் சென்றதாகக்கூறியபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனை உதாசீனம் செய்து வருவதாகவும்இதனால் இலங்கைப்பிரசை என்று பிள்ளைகளை பதிவு செய்யமுடியாமல் பல பெற்றோர் திண்டாடி வருகிறார்கள். (வி)

---

## நீரில் மூழ்கி மாணவன் பலி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மேற்கு அரசடியில் உள்ள கேணி ஒன்றில் நேற்று முன்தினம் தமது நண்பர்களுடன் நீந்தி விளையாடிய 12 வயதுச் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமானான்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் 6ம் ஆண்டு வகுப்பில் கல்வி கற்று வந்த விக்னேஸ்வரன் யோககுமார் என்னும் மாணவனே இவ்வாறு பலியானவராவார்.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு காரைநகர் தோப்புக்காடு என்னும் கிராமத்தில் இருந்து இடம்

(4-ம் பக்கம் பார்க்க)

---

## வேங்கைகள் எழுந்தன வீறுடன் நடந்தன

"குண்டுதுளைத்து குருதியில் தேகம் குளித்திடும் வேளையிலும் எம் தமிழீழம் மீட்க வேண்டும், என்ற இதய வேட்கையோடு இமைகளை மூடிய மாவீரர்கள் இவர்கள், எல்லையில் எதிரி நின்றிடும் வேளையில் எனக்கென்றொரு வாழ்வா என்று உணர்ந்து கொண்டு எழுந்து நடந்தவர்கள் உரிமை மீட்க உயிரை உருக்கி ஒளிர்பவர்கள்."

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட ஆரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தேசம் எரிகையில் பாசமழைக்குள் நனைவதா? மக்களினம் தவிக்கையில் எமக்கு மட்டும் வாழ்வா? இந்தக் கேள்விகள் இதயத்தில் எழுந்தன. இமைகள் விரிந்தன. விழிகள் தீயை ஏந்தின. வேங்கைகள் எழுந்தன. வீறுடன் நடந்தன.

சொந்த வாழ்க்கைக் கனவினைக் கலைத்துவிட்டுத் தாயக விடிவு ஒன்றே தம் உன்னத இலட்சியம் என்பதில் உறுதியாக நின்றவர்கள் எம் மாவீரர்கள். அதனால் தான் புயலும், மழையும் உறைய வைக்கும் பனியும், எரிக்கும் வெய்யிலும் இவர்களைத் தளர வைக்கவில்லை. இழப்புகளை எண்ணி அழுவதோடு நின்று விட்டால் அந்நியப் பிடிக்குள் எம் தேசம் அமுக்கப்பட்டு விடும் என்று தெரிந்துகொண்டார்கள். அதனால் வெந்தணலை உள்ளத்துள் ஏந்தி வீறுடன் நடந்தார்கள். விடியலைக் காணுமுன்னே விளக்காகி ஒளிர்ந்தார்கள். தாகம் அடங்காமல் கல்லறைகளில் துயிலும் இவர்களின் கனவு நனவாகும் என்பது உறுதியிலும் உறுதி.

கொடும்பனியில் உறைந்தாலும்
கடுந்தணலுள் கருகினாலும்
கொண்ட கொள்கை வழுவாது நின்றிடுவோம்
கொடிய பகை முடித்து வென்றிடுவோம் என்று
சொல்லாமல் சொல்லி
விடுதலைச் சுடராக ஒளி வீசுபவர்கள்
எம் மாவீரர்கள்
புது வீதியாய் எழுந்து
அடிமைத் தளை அறுக்க
பெரு நெருப்பாய் கனன்றவர்கள்.

---

## மருத்துவபீடாதிபதி தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ பீடாதிபதியின் மனம் நோகும் விதத்திலோ, அவமதிப்பை ஏற்படுத்தக் கூடியவாறோ, மாணவர்கள் எவ்விதத்திலும் நடந்து கொள்ளவில்லை. அவர் தொடர்ந்தும் பீடாதிபதியாக இருக்க வேண்டுமென்று அனைத்து மாணவர்களும் விரும்புகின்றோம்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அண்மைக் காலமாக வெளிவந்த செய்திகள், மருத்துவபீட மாணவர்கள் மீது தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருப்பதால் மாணவர்களின் உண்மைநிலையை வெளிப்படுத்தவேண்டிய சூழ்நிலைக்கு மருத்துவ மாணவர் ஒன்றியம் தள்ளப்பட்டுள்ளது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் பல்வேறு சிரமங்களையும் தாங்கிக்கொண்டு மருத்துவ கல்வியை தொடரும் நாம் இதனால் மிகவும் மனவேதனை அடைகின்றோம்

கடந்த 29 வியாழக்கிழமையன்று மருத்துவபீட நிர்வாகம் புதிய மாணவர்களுக்கு ஏற்படுத்திய இடையூறுகளை நீக்குமுகமாக, புதிய மாணவர்கள் ஆரம்பித்த போராட்டத்தில் எல்லா மாணவர்களும் இணைந்து மிகவும் அமைதியான முறையிலேயே மறியற்போராட்டம் நடாத்தப்பட்டது அன்றுமாலை துணைவேந்தர், பீடாதிபதி, பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர் ஆலோசகர், மாணவ பிரதிநிதிகள் இணைந்து கலந்துரையாடி குறைகளுக்கு சுமுகமான தீர்வு எட்டப்பட்டது.

அத்தீர்மானத்தின்படி மருத்துவபீட மாணவர்கள் புதிய மாணவர்களை எவ்விதத்திலும் துன்புறுத்துவதில்லை என்றும், துன்புறுத்தும் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு மாணவர்கள் உதவி செய்வதென்றும், புதிய மாணவர்களுடன் மருத்துவபீட வளாகத்தினுள் உரையாடுவதற்குரிய தடையை நீக்குவதென்றும் புதிய மாணவர்களுடன் 'கலந்து பழகுதல்' மாணவ ஆலோசகரது மேற்பார்வையின்கீழ் நடைபெறுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்ந்து சுமுகமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவபீட மாணவர் ஒன்றியம் எப்பொழுதும் 'ராகிங்கை' எதிர்த்தே வந்துள்ளது என்பதும் மருத்துவ பீடத்திற்கு வரும் புதிய மாணவர்களை சிநேக பூர்வமாகவே அணுகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருத்துவபீட மாணவர்களை பொறுத்தவரை சகல மாணவர்களுக்குமிடையே அறிமுகமும் புரிந்துணர்வும் இன்றியமையாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. புத்தகங்கள் மருத்துவக் கல்வி தொடர்பான ஆலோசனைகள் பாடக்குறிப்புகள் வழங்குதல், வெளிமாவட்ட மாணவர்களுக்கு இருப்பிடம் உணவு போன்றதேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அவர்களின் மனச்சோர்வை நீக்குமுகமாக அவர்களிடமுள்ள விளையாட்டு, கலையாற்றல் போன்ற திறமைகளை அறிந்துகொண்டு ஊக்குவித்தல் போன்ற பல வழிகளிலும் சிரேஷ்ட மாணவர்களுக்கு உதவிகள் புரிந்து வருகினறனர்.

இந் நிலையில் மருத்துவ பீடாதிபதியின் பதவி விலகல் மாணவர்களுக்கு புரியாத புதிராகவும் அதிர்ச்சியை அளிப்பதாகவும் இருந்தது. பீடாதிபதியின் மனம் நோகும் விதத்திலோ, அவமதிப்பை ஏற்படுத்தக்கூடியவாறோ மாணவர்கள் எவ்விதத்திலும் நடந்துகொள்ளவில்லை. அவர் தொடர்ந்தும் பீடாதிபதியாக இருக்கவேண்டுமென்று அனைத்து மாணவர்களும் விரும்புகின்றோம்.

---

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கற்கை நெறி இரண்டாம் வருட மாணவர்களின் விரிவுரைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன.

இவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 28ம் திகதி முடிவடையும்.

தொழிலாளர் கல்வி நெறி டிப்ளோமா வகுப்புகள் அடுத்த ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (159)

---

## கலந்துரையாடல்

(நெல்லியடி)

எதிர் வரும் காலங்களில் சனசமூக நிலையங்களின் நன்கொடைகள் அதிகரிப்பது பற்றிய கலந்துரையாடல் எதிர் வரும், 15ம் திகதி கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு சமாசத் தலைவர் திரு. கே. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (160)

# ★ தொடரும் யுத்தத்தினால் ஒன்றரை லட்சம் வீடுகள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் சேதம்

## நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

"வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்தினால் சுமார் ஒன்றரை லட்சம் வீடுகள்வரையில் நாசமாக்கப்பட்டுள்ளன. வைத்திய வசதியோ, கல்வி வசதியோ, வைத்திய நிபுணர்களோ போதிய குடிநீர் வசதியோ எதுவும் இங்கு இல்லை. இதனால் இப்பகுதிகளில் இறப்புவீதம் அதிகரித்துச் செல்கிறது".

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஒருவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத்திட்டம்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாம் இணைந்து வாழவே விரும்புகிறோம். எங்கள் இணைப்பு உங்களுக்கு அவசியமில்லையென்றால் எம்மைப் பிரிந்து போகவிடுங்கள்.

நிதியமைச்சர் சமர்ப்பித்த வரவு-செலவுத்திட்டம் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் பயன்படப்போவதில்லை. அப்பகுதிகளில் வாழ்வோரில் பெரும்பான்மையோர் விவசாயிகளும் மீனவர்களுமே யாவர்.

மீனவர்களைப் பொறுத்த வரையில் பகலிலோ, இரவிலோ மீன்பிடிக்கக்கூடாதென ஸ்ரீலங்கா அரசு தடைவிதித்துள்ளது. வடக்கு-கிழக்கு பகுதிகளில் 50 சதவீதமான நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி வருகின்றது என்றும் 12 சதவீத நெல் விளைச்சல் பெற்ற இப்பகுதிகள் தற்போது 3 சதவீதம் மட்டுமே நெல்விளைச்சல் கிடைக்கிறது. வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தமே இதற்குக் காரணம் என்றார்.

மேலும் 40 வருட காலமாக இலங்கையின் இனப்பிரச்னை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. வடக்கு-கிழக்கு அபிவிருத்திகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது இந்தியாவில் பஞ்சாப், அஸாம் மற்றும் பாகிஸ்தானிலும் யுத்தம் நடைபெறுகிறது. ஆனால் வடக்கு-கிழக்கு பகுதியில் நடைபெறுகின்றது வீச்சு விமானங்களின் தாக்குதல்களைப்போல அங்கு விமானத் தாககுதல்கள் இடம்பெறுவதில்லை என்றார். (க-ரி)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான அக்டோபர் மாத சம்பளக் கொடுப்பனவுகள் இன்று 12ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நாவலர் வீதியிலுள்ள சீமெந்து தொழிற்சாலை தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புஷ்ஷின் தோல்வி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் புதிதாக தெரிவாகியிருக்கும் திரு. பில்கிளிங்டன் கடைப்பிடிக்கவிருக்கும் பொருளாதார சர்வதேசக் கொள்கைகள் புஷ் கடைப்பிடித்த கொள்கைகளுக்கு நேர் எதிராகவே அமையவிருக்கின்றன.

இதனால் இலங்கை போன்ற நாடுகள் கிளிங்டன் நிர்வாகத்தினால் பெரிதும் பாதிக்கப்படவிருக்கின்றன.

குறிப்பாக திரு பிரேமதாசா ஆரம்பித்திருக்கும் ஆடைத்தொழிற்சாலைத் திட்டம் கிளிங்டன் நிர்வாகத்தில் இலங்கைக்கு ஒரு பொருளாதார வெற்றியை ஈட்டித்தராது

இதனால் இலங்கை பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை கிளின்டன் நிர்வாகத்தில் எதிர்நோக்கவேண்டியிருக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சுவிஸில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு அங்கு ஆறு மாதம் வேலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் நாட்டில் எங்கே வசிப்பது என்ற தீர்மானம் எடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

விசேட விதிவிட வசதி வழங்கப்பட்ட 4500 பேருக்கு ஒரு வருட காலம் வேலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களும் தாங்கள் வசிக்கும் இடங்களைச்சுயமாகத் தேர்ந்தெடுக்க முடியாது என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

இதேவேளையில் மனித உரிமை மீறல் விடயங்களில் புஷ்ஷை விட கிளிங்ரன் தீவிர கொள்கைகளைக் கடைப்பிடிப்பவரென்றும் இதுவும் எதிர்காலத்தில் அமெரிக்க உதவிகள் இலங்கைக்குகிடைப்பதில் பெரும் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்று அறிவித்தது.

இத்தாக்குதலை கடற்புலிகள் மேற்கொண்டதாகவும், கடற்புலி போராளிகள் சுமார் 15 படகுகளில் சென்று நயினாதீவு கடற்படை தளம் மீது திடீர்தாக்குதலை மேற்கொண்டதாகவும் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் கடும் சமர் நடைபெற்றதாகவும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. (வி)

## நீரில மூழ்கி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து வந்து வட்டுக்கோட்டையில் இந்த மாணவன் தன் பெற்றோர்களுடன் வசித்து வந்தார். (139)

## இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: வாக்குதவறுதல், குடும்பபிரிவு, பணமடை.

மீனம்: ஞானசிந்தனை, பெரியவர் ஆசி, சுபகாரியம்.

— ஜோஸபர்

## மாவீரர் வாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பது பற்றி, தமிழீழ மாவீரர் பணிமனை பின்வரும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

### வளைவுகள்

ஒரு வட்டவைக்கு ஆகக்கூடிய வளைவுகளின் தொகை பத்தாக இருக்கவேண்டும். இவற்றுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனம்பொருள் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் என்பவற்றின் மூலமாக மூன்று வளைவுகள் 21 அடி உயரமாகக் கட்டப்படல் வேண்டும்.

### பந்தல்கள்

ஒரு வட்டவைக்கு ஒரு பந்தல் என்ற ரீதியில் அமைக்கப்படவேண்டும். ஒரு பந்தல் 80 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

இவற்றில் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் யாவும் ஒழுங்காக வைக்கப்படவேண்டும் இப்படங்கள் நிலத்தில் இருந்து 4 அடி உயரத்துக்குக் குறைவாக வைக்கப்படக்கூடாது. பந்தல்கள், பொதுமக்கள் வந்துகூடும் பொதுவான இடங்களிலேயே அமைக்கப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் தெருக்களுக்குக் குறுக்காகப் பந்தல்கள் அமைக்கப்படல் கூடாது.

இவ்விடயம் மாவட்டப் பொறுப்பாளர்களால் மேற்கொளளப்படவேண்டும். சுலோகங்கள், பதாகைகளுக்குரிய வசனங்களை, பணிமனை மூலமே பெறல்வேண்டும். (வி)

## ஆரம்ப

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லட்சத்து 45 ஆயிரம் பேர் தோற்றிய மேற்படி பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்ற ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்களென்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வேதமுல்ல தெரிவித்துள்ளார். (வி)

## பாத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

நேற்று தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலை கொண்ட தாழமுக்கம் மட்டக்களப்புக்கு 350 கிலோமீட்டர் நகர்ந்துள்ளபோதிலும், இது மீண்டும் பலமடைந்து இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியை நோக்கி நகரக்கூடுமென்பதால் இப்பகுதிகளில் பலத்த காற்றுடனும் இடிமுழக்கத்துடனும் அடிக்கடி மழைபெய்யுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதனால் கடல் மிகவும் கொந்தளிப்பாக இருப்பதினால், அடுத்த 24 மணி நேரத்துக்கு மீனவர்களை கடலுக்கு போக வேண்டாமென்று, வளிமண்டலத்திணைக்களம் எச்சரிக்கை செய்துள்ளது. (வி)

## புதிய வரவு

1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும் அப்போது திரு. ரெனிடிமெல் லண்டனிலிருந்து இந்த நிதிவசதிகளை இலங்கை அரசுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டதாகவும் லண்டனில் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் அவர் விரைவில் நாடுதிரும்பவிருப்பதாகவும் அவர் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு பிரதமர் பதவியும் நிதி அமைச்சர் பதவியும் அவருக்கு வழங்கப்படவிருப்பதாகவும் ஏற்கனவே தகவல்கள் வெளிவந்திருப்பது தெரிந்ததே (இ)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கை முஸ்லிம்களின் அதிஉயர்ந்த சபையான ஜமியதுல் உலமா சபையின் செயலாளர் மௌலவி ரியால் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் புலிகளுக்கு எதிராக முஸ்லிம்கள் புனிதப் போர் ஒன்றைத் தொடுக்கத் தயாராக இருப்பதாகவும் ஜமியதுல் உலமா சபையின் உத்தரவுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இது குறித்து மேற்படி சபையின் செயலாளர் மௌலவி றியாலிடம் கொழும்பில் சிங்களப் பத்திரிகை ஒன்று கேள்வி எழுப்பிய போதே அவர் இது குறித்து எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லையென தெரிவித்தார்.

எதிர்வரும் 29-ம் திகதி ஜமியதுல் உலமா சபை கூடவிருக்கிறது. இதில் ஜனாப் அஷ்ரப் புனித யுத்தம் குறித்து தெரிவித்துள்ள கருத்துப்பற்றி விரிவாக விவாதிக்கப்படும் என்றும் மௌலவி றியால் தெரிவித்துள்ளார். (இ)

## வவுனியா முன்னாள் எம். பி. காலமானார்

(ரொண்றன்ரோ)

வவுனியாவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரி சிவசிதம்பரம் நேற்று முன்தினம் கனடாவில் காலமானார்

இவர் சிறிது காலம் சுகயீனமுற்றிருந்தார். (சி)

## மட்டுநகரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக மட்டக்களப்பு கிழக்குப் பகுதியில் இன்று நண்பகல் நூறு கிலோ மீற்றர் வேகத்தில் கடும் புயல் காற்று வீசக் கூடுமென்றும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. (வி)

## 26 இல. மீனவர்களை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தலை செய்யப்பட்டனர்.

கன்னியா குமரியிலிருந்து 5 படகுகளில் இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் வேண்டுகோளின் பேரிலேயே மேற்படி 26 மீனவர்களும் அனுப்பப்பட்டதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக நடைபெற்று வரும் வடக்கு கிழக்குப்பகுதி யுத்தத்தினால் நாட்டின் பொருளாதார பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது

எனவே இதற்குஉடன்முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டும். பாதுகாப்புச் செலவீனங்கள் வருடாவருடம் அதிகரித்துக் கொண்டுபோகின்றன. நாட்டின் அபிவிருத்திவேலைகளும் பெருமளவு பாதிப்படைந்துள்ளன. இவ்வாறு இருதரப்பினரும் நேற்றைய வரவுசெலவு திட்டம் மீதான விவாதத்தின் போது தெரிவித்தனர். (வி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மனித உரிமைகள் காப்பு இயக்கமான 'ஏசியா வோட்ச்' ஐ. நா. சபையின் உயர் ஸ்தானிகராலய தலைவரான திருமதி சாடாகோ பக்டோவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தமிழகத்தில் உள்ள அகதிமுகாம்களுக்குச் சென்று பார்வையிட்டு அகதிகள் நலன் பற்றி அறிந்து கொள்வதற்கு அகதிகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கு அனுமதி கொடுக்கப்படும் வரையில் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது.

மேலும் வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்வதால் தமிழ் அகதிகள் தமது சொந்தவிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஸ்ரீலங்கா அரசின் எல்லைக்குள் இருக்கும் நலன்வாழ்வு நிலையங்களிலேயே தமிழ் அகதிகள் தங்கவேண்டியுள்ளது. இந்நிலையங்கள் பெருமளவு அகதிகளால் நிரம்பி வழிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகுரு தங்கம்மா

கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட சிவகுரு தங்கம்மா அவர்கள் 11 - 11 - 1992 அன்று சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற மாதர் - சிவகுரு அவர்களின் அன்பு மனைவியாரும், சிவலோகமணி (மாணிக்கம்) வாமதேவன் (மலேரியாத் தடை இயக்கம் யாழ்ப்பாணம்), ஞானசம்பந்தர் உருத்திரராசா (யாழ். மாநகர சபை) பிரமதேவன் (தமிழீழகாவல்துறை), தெய்வேந்திரா (யாழ்.பல்கலைக்கழகம்), உமாகரன் யாழ் பல்கலைக் கழகம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லர் மாணிக்கம் (இலங்கை மின்சாரசபை யாழ் போதனா வைத்தியசாலை), புஸ்பராணி, மேரி அற்புதமலர், நிர்மலாதேவி, சந்திரகலா சசிகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் பிறேமா, குகராசா (இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்) தர்மகுமார் சைலஸ்ரீ, ஸ்ரீகுமார், தர்ஷிகா, பிரதீபா, விஜிதா, வான்மதி, சஞ்சீவன் அமிர்தினி, ஸ்ரீஜெனந்த், ஜனந்த், மில்டன், ஜனார்த்தன், வாணி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் (இன்று) 12 - 11 - 1992 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:- சி. வாமதேவன்
(மகன்)

செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(சி-6974)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8